1981 மே 12]

விளவங்கோடு தாலுகாவில் குழித்துறை ஆற்றுக்குச் செல்லும் பாதையில் பயன்படுத்தப்படாமலுள்ள தார் டின்கள்

*வினா எண் 1071—திரு. டி. மணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில், விளவங்கோடு தாலுகாவில் வெட்டுவந்தி சாஸ்தா கோயில் பக்கத்தில் குழித்துறை ஆற்றிற்கு வரும் பாதையில் நூறு டின்களுக்கு மேல் தார் பல ஆண்டுகளுக்கு முன் அடுக்கி வைக்கப்பட்டு பயன்படுத்தப்படாமல் டின்கள் கெட்டுப்போய் தார் முழுவதும் ரோடில் ஒழுகுகிறது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இதனால் அரசுக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டுள்ளது?

(இ) அதற்குக் காரணமானவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ). ஆம்,

(ஆ) ரூ. 37,000

(இ) இப்பணி சம்பந்தப்பட்ட இளநிலைப் பொறியாளர் தற்காலிக பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். மேலும், அரசுக்கு ஏற்பட்டுள்ள நஷ்டத்தை இவரிடம் வசூலிக்கத் தகுந்த ஒழுங்கு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. டி. மணி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சம்பந்தப்பட்டவர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகச் சொன்னார்கள். ஆனால், இன்னும் அந்தப் பகுதியிலே ஏராளமான பள்ளங்களும், உடைவுகளும் இருந்து வருகின்றன. ஆகவே, அந்த தாரை எடுத்து, அவைகளை செப்பனிட உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா? ஏற்கெனவே 1978-79-ல் தேசிய நெடுஞ்சாலைக்கு தார் இல்லை என்று சொல்லி, களியக்காவிளையிலிருந்து கன்னியாகுமரி வரையிலான அந்த ரோடு பழுது பார்க்கப்படாமல், குண்டும் குழியுமாக இருந்து வருகிறது. ஆகவே, தார் போட்டு உடனடியாக அந்த ரோடு செப்பனிடப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, வெட்டுவந்தி சாஸ்தாகோயில் அருகில் 241 தார் டின்கள் சேகரம் செய்து வைக்கப்பட்டிருந்தன. அவை வெளியிலே இருந்த காரணத்தால் 119 டின்கள் காலியாகி கிடக்கின்றன. அந்த 119 டின் தாரின் மதிப்பு 37,000 ரூபாய். அவை ஒழுங்காக வைக்கப்படவில்லை; வெளியிலே வைத்த காரணத்தால் நஷ்டத்தை ஏற்படுத்தியிருப்பதன் காரணமாக அங்கிருக்கிற இளநிலைப் பொறியாளர் மீது நடவடிக்கை எடுத்து, அவர் தற்காலிக பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். அந்தப் பகுதிக்கு இன்னும் தார் தேவை என்பதால் உடனடியாக தார் அனுப்பப்பட்டு, வேலை தொடங்கப்பட்டிருக்கிறது.